ஆதிசங்கரர் அருளிய 'பாஹுலேய புஜங்கம்'
எனப்படும்

ஸ்ரீ ஸுப்ரமண்ய புஜங்கம்

(ஸ்ரீ ஸுப்ரமண்ய புஜங்கம், ஸ்கந்த ரத்ன பஞ்சகம்,
ஆக்நேய ஆர்த்தி விநாசனஸ்தவம், ஸ்வாமிநாதஸ்வம்
ஆகியவை அடங்கியது)

குஹஸ்ரீ

மல்லாஜி வெ. ரத்ன சர்மா

PIONEER PUBLICATIONS

ஆதிசங்கரர் வழங்கிய

'பாஹுலேய புஜங்கம்'

எனப்படும்

ஸ்ரீ ஸுப்ரமண்ய புஜங்கம்

(ஸ்ரீ ஸுப்ரமண்ய புஜங்கம், ஸ்கந்த ரத்ன பஞ்சகம், ஆக்நேய ஆர்த்தி விநாசனஸ்தவம், ஸ்வாமிநாதஸ்வம் ஆகியவை அடங்கியது)

(இலவச விநியோகத்திற்கு விலையில் தள்ளுபடி உண்டு)

குஹஸ்ரீ

மல்லாஜி வெ. ரத்ன சர்மா

Also available at:

54, வாலாஜா ரோடு, முதல் மாடி,
சென்னை 600 002.

தொலை பேசி : **3298 0233, 2265 41 95**

பயனீர் பப்ளிகேஷன்ஸ்

6(பழைய எண் : 33), மூன்றாம் தெரு, கண்ணன் நகர்
(மகளிர் வைணவக் கல்லூரியின் பின்புறம்)
குரோம்பேட்டை, சென்னை **600 044.**

e-mail address: ***pioneerpublicationschennai@yahoo.co.in***

please visit: **www.geocities.com/pioneerpublicationschennai**

முதல் பதிப்பு : ஃபிப்ரவரி, 2007

© உரிமை உடையது

ஆசிரியர் முகவரி:
1/35, அக்ரஹாரம், பழூர் கிராமம்,
முத்தரசநல்லூர்(அஞ்சல்), திருச்சி 620 101.
e-mail address:*mallaji_v_rathnasharma@yahoo.com*
please visit: **www.geocities.com/mallaji_v_rathnasharma**

விலை ரூ **3.00**

பயனீர் பப்ளிகேஷன்ஸ்

'பாஹுலேய புஜங்கம்'

எனப்படும்

ஸ்ரீ ஸுப்ரமண்ய புஜங்கம்

இந்த பாஹுலேய புஜங்கம் ஞான பண்டிதனாம் ஷண்முகனது பரத்துவ நிலையை ஶ்ருதி, ஸ்ம்ருதி, ஆகமம், புராணம் முதலியவை இரகசியமாய் விளக்குவது போலத் தெளிய விளங்க வைக்கும். இது படிப்பவர் மனத்தை உருக்கும், அன்பை வளர்க்கும், மன ஒருமைப்பாட்டை நிலைக்க வைக்கும்..

இந்தச் சிறுநூலை நாம் எல்லோரும் உய்ய ஆதிசங்கரர் இயற்றியுள்ளார். இதை இயற்றியதும் அவருக்கு ஏற்பட்ட மனநோய், உடல் நோய் ஆகிய இரண்டும் நீங்கின.

இதில் முப்பத்து மூன்று ஶ்லோகங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றையும் தனித்தனியே ஜபிப்பதால் ஏற்படும் குறிப்பிட்ட பலன்களும், நைவேத்யங்களும் ஜப எண்ணிக்கையும், நாட்களும் எல்லா ஶ்லோகங்களுக்கும் பொதுவான யந்திரமும் தரப்பட்டிருக்கின்றன. இந்த யந்திரத்தை சுத்த ஜலத்திலோ, பாலிலோ, விபூதியிலோ, வெள்ளித் தகட்டிலோ, தங்கத் தகட்டிலோ எழுதி பூஜை செய்து குறிப்பிட்ட எண்ணிக்கையில்–குறிப்பிட்ட நாட்கள்–ஜபம் செய்து, குறிப்பிட்ட நைவேத்யமும் செய்து, வேண்டிய பயன் பெறலாம். இதைத் தவிர ஒவ்வொரு ஸ்லோகத்துக்கும் தனித்தனியாக யந்திரமும் விஶேஷ பூஜை, ஜப, நிவேதன முறையும் உண்டு. அவற்றைக் குரு மூலமாக அறிந்து கொள்ள வேண்டியதால் அவை குறிப்பிடப்படவில்லை. விஶேஷ பலன் அடைய விரும்புவோர் அடியேனுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்து கொள்ளலாம்.

இப்புத்தகத்தினைப் படிப்பவர்களுக்கும் இதைப் படிக்கச் சொல்லிக் கேட்பவர்களுக்கும் மற்றும் அவர்கள்தம் குடும்பத்தோருக்கும் ஏனையோர்க்கும் எல்லாவித நன்மைகளையும் அருள அந்த ஞானஸ்கந்தனை ப்ரார்த்திக்கிறேன்.

மல்லாஜி வெ. ரத்னசர்மா

குஹ யந்த்ரம்



1. விக்னம் நீங்க...

வினாயக த்யானம்

ஸதா பாலரூபாபி விக்நாத்ரி ஹந்த்ரீ
மகாதந்தி வக்த்ராபி பஞ்சாஸ்ய மான்யா ।
விதீந்த்ராதி ம்ருக்யா கணேஶாபிதாமே
விதத்தாம் ஶ்ரியம் காபி கல்யாணமூர்த்தி: ॥

ஸதா ஸர்வ காலமும் குழந்தை உருவாய் இருந்தாலும் மலை போன்ற கஷ்டங்களைப் போக்குபவரும், யானை முகம் உள்ளவரானாலும், சிங்கத்தால்(பரமசிவனால்) போற்றத் தக்கவரும், இந்திரன், பிரும்மா முதலியவர்களால் தேடத் தக்கவரும் ஆன கணேசர் நமக்கு மங்களம் உண்டாக்கட்டும்.

நிவேதனம் : நெய் மோதகம்

பாராயணம்: ஒவ்வொரு நாளும் 500 முறைகள் வீதம் 5 நாட்கள் இந்த ஶ்லோகத்தைச் சொல்லவும்.

2. கல்வி வளர, வாக்கு வன்மை பெருக...

அவை அடக்கம்

நஜாநாமி பத்யம் ந ஜாநாமி கத்யம்
ந ஜாநாமி ஶப்தம் ந ஜாநாமி சார்த்தம் ।
சி தேகா ஷடாஸ்யா ஹ்ருதி த்யோ ததேமே
முகாந்நிஸ்ஸரந்தே கிரஶ்ஶ்சாபி சித்ரம் ॥

எனக்குச் சொல்லோ பொருளோ செய்யுளோ, உரைநடையோ தெரியாது. ஆனாலும் ஜோதிப் பிழம்பாம் ஆறு முகங்களை உடைய ஓர் உருவம் என் உள்ளத்தில் தோன்றி என் வாக்கினின்றும் சில சொற்களை வெளிவரச் செய்வது ஆச்சரியமே!

நிவேதனம் : பால் பாயசம்

பாராயணம்: ஒவ்வொரு நாளும் 1000 முறைகள் வீதம் 24 நாட்கள் இந்த ஶ்லோகத்தைச் சொல்லவும்.

3. அதிகாரம் பெற, உத்தியோகம் கிடைக்க...

குஹன் பெருமை

மயூராதி ரூடம் மஹாவாக்ய கூடம்
மநோஹாரி தேஹம் மஹச்சித்த கேஹம் ।
மஹீதேவ தேவம் மஹாவேத பாவம்
மஹாதேவ பாலம் பஜே லோக பாலம் ॥

மயிலின் மீது அமர்வோனும், மஹாவாக்கியத்தின் உண்மைப் பொருளும், அழகான உருவம் படைத்தவனும், மஹான்களின் மனத்தையே வீடாக உடையவனும், அந்தணர்களின் தேவனும், வேதத்தின் உட்பொருளும், உலகம் முழுவதும் காப்பவனும், மகாதேவன் மைந்தனுமாகிய குஹனை வணங்குகிறேன்.

நிவேதனம் : தத்யோதனம்

பாராயணம்: ஒவ்வொரு நாளும் 1000 முறைகள் வீதம் 36 நாட்கள் இந்த ஸ்லோகத்தைச் சொல்லவும்.

4. இழந்ததைப் பெற, உத்தியோகம் கிடைக்க...

வசிக்கும் இடம்(கடற்கரை)

யதா ஸந்நிதாநம் கதா மானவாமே
பவாம் போதிபாரம் கதாஸ்தே ததைவ ।
இதிவ்யஞ்ஜயன்ஸிந்து தீரே ய ஆஸ்தே
தமீடே பவித்ரம் பராஶக்தி புத்ரம் ॥

என்னைச் சேர்ந்த மக்கள், எனது ஸந்நிதானத்தை எப்போது அடைகிறார்களோ அப்போதே அவர்கள் ஸம்ஸார ஸாகரத்தைக் கடந்தவர்களாக ஆவார்கள் என உலகமக்களுக்கு உணர்த்த, திருச்செந்தூர் கடற்கரையில் வீற்றிருக்கும் பராசக்தியின் புத்திரனைப் போற்றுகின்றேன்.

நிவேதனம் : முத்தான்னம்

பாராயணம்: ஒவ்வொரு நாளும் 1000 முறைகள் வீதம் 36 நாட்கள் இந்த ஸ்லோகத்தைச் சொல்லவும்.

5. ஆபத்து நீங்க...

வசிக்கும் இடம்(அலைவாய்)

யதாப்தேஸ் தரங்கா: லயம் யாந்தி துங்கா:
ததைவாபத: ஸந்நிதிம் ஸேவமானே |
இதீ வோர்மி பங்தீ: ந்ருணாம் தர்ஸயந்தம்
ஸ்தா பாவயே ஹ்ருத் ஸரோஜே குஹம்தம் ||

ஸமுத்திரத்தில் அலைகள் மேலே எவ்வளவு உயரம் எழும்பிய போதிலும், அவை எவ்வாறு கடலிலேயே கலந்து விடுகின்றனவோ அது போல என் ஸன்னிதானத்தை அடைந்தவர்களது ஆபத்துக்கள் அழியும் எனவரிசையாய் வரும் அலைகளால் காட்டும் குஹனை, என் உள்ளத் தாமரையில் வைத்து, எப்போதும் தியானிக்கிறேன்.

நிவேதனம் : ஆரஞ்சுப் பழம் நிவேதனம்
ஒவ்வொரு நாளும் 600 முறைகள் வீதம் 36 நாட்கள் இந்த ஸ்லோகத்தைச் சொல்லவும்.

6. உயர்வு பெற...

வசிக்கும் இடம்(மலையில்)

கிரௌமந் நிவாஸே நராயே திரூடா:
ததா பர்வதே ராஜதே தேதிரூடா: |
இதிவப்ருவன் கந்தஸைலா திரூட:
ஸ தேவோ முதே மே ஸதா ஷண்முகோஸ்து ||

நான் வசிக்கும் மலையில் ஏறுகிறவர்கள், கைலாசத்தில் வீற்றிருந்து விளங்குவர், எனக் காட்டுவது போன்று, கந்த மாதனம் என்ற மலையில் அமர்ந்திருக்கும் முருகன், என்னை மகிழ்விக்க ஆறு முகமாய்த் தோன்றட்டும்.

நிவேதனம் : தத்யோதனம், தேங்காய், பழம் நிவேதனம்
ஒவ்வொரு நாளும் 1000 முறைகள் வீதம் 36 நாட்கள் இந்த ஸ்லோகத்தைச் சொல்லவும்.

7. கஷ்டம் நீங்க...

வசிக்கும் இடம்(குகையில்)

மஹாம் போதி தீரே மஹாபாப சோரே
முனீந்த்ராநுகூலே ஸுகந்தாக்ய ஸைலே |
குஹாயாம் வஸந்தம் ஸ்வபாஸா லஸந்தம்
ஜநார்த்திம் ஹரந்தம் ஶ்ரயாமோ குஹம்தம் ||

பரந்த கடற்கரையில் மஹா பாவங்களைப் போக்குவதும், மஹரிஷிகள் வசிக்கும் இடமுமான, ஸுகந்தம் என்ற மலையில் உள்ள குஹையில் வசித்து, அவ்விடத்தை ஒளிபெறச் செய்து, மக்கள் கஷ்டத்தைப் போக்கும் குஹனை அண்டுகிறேன்.

நிவேதனம் : சர்க்கரைப் பொங்கல்

பாராயணம்: ஒவ்வொரு நாளும் 1000 முறைகள் வீதம் 24 நாட்கள் இந்த ஶ்லோகத்தைச் சொல்லவும்.

8. வசதி பெருக...

இருக்கும் இடம் (பீடம்)

லஸத் ஸ்வர்ண கேஹே ந்ருணாம் காமதோஹே
ஸுமஸ்தோம ஸஞ்சன்ன மாணிக்ய மஞ்சே |
ஸமுத்யத் ஸஹஸ்ரார்க்க துல்ய ப்ரகாஶம்
ஸதா பாவயே கார்த்திகேயம் ஸுரேஶம் ||

பிரகாசம் நிறைந்ததும், தங்கமயமானதும், மக்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதும், புஷ்பங்கள் நிறைந்ததும், மாணிக்கக் கற்களால் இழைக்கப் பெற்றதும், ஆன கட்டிலில் இளஞ்சூரியன் போல் காட்சியளிக்கும், தேவர்கள் தலைவனாம் கார்த்திகேயனை நினைக்கிறேன்.

நிவேதனம் : பால், பழம், கற்கண்டு, திராக்ஷை

பாராயணம்: ஒவ்வொரு நாளும் 600 முறைகள் வீதம் 48 நாட்கள் இந்த ஶ்லோகத்தைச் சொல்லவும்.

9. சந்தோஷம் பெருக...

பாத வர்ணனை

ரணத்தம்ஸகே மஞ்சுளேத்யந்த சோணே
மநோஹாரி லாவண்ய பீயூஷ பூர்ணே ।
மநஷ்ஷட்ப தோமே பவக்லேச தப்த:
ஸதா மோததாம் ஸ்கந்த தே பாதபத்மே ॥

ஏ ஸ்கந்த! ஒலிக்கின்ற கால் சலங்கைகளை உடைய, அழகான சிவப்பு நிறம் உள்ள, அம்ருதம் நிரம்பிய, மனம் கவரும் உன் திருவடித் தாமரைகளில்(உலகப் பற்றால் துன்பம் அடைந்த) என் மனமான வண்டு அமர்ந்து, இன்பம் அடைய அருள்வாய்!

நிவேதனம் : வெண் பொங்கல்
பாராயணம்: ஒவ்வொரு நாளும் 600 முறைகள் வீதம் 36 நாட்கள் இந்த ஸ்லோகத்தைச் சொல்லவும்.

10. நிம்மதி அடைய, அழகு பெற...

இடுப்பு வர்ணனை

ஸுவர்ணாப திவ்யாம் பரோத்பாஸ மானம்
க்வணத் கிங்கிணீ மே கலா சோபமானம் ।
லஸத்ஹேம பட்டேன வித்யோத மானம்
கடிம்பாவ யேஸ்கந்த தே தீப்ய மானம் ॥

தங்கத்தின் ஒளி நிறைந்த அழகான ஆடையால் அலங்கரிக்கப் பட்டதும், 'கிண் கிண்' என ஒலிக்கின்ற மேகலையை உடையதும் தங்கமயமான பட்டையால் ஒளி மிக்கதும் ஆன இடுப்பின் அழகைக் கண்டு மகிழ்கின்றேன்.

நிவேதனம் : தேங்காய் சாதம், தினைப் பாயசம், பழம், தேங்காய், வெற்றிலை பாக்கு
பாராயணம்: ஒவ்வொரு நாளும் 1000 முறைகள் வீதம் 12 நாட்கள் இந்த ஸ்லோகத்தைச் சொல்லவும்.

11. விவாஹ பிராப்தி பெற...

மார்பு வர்ணனை

புளிந்தேஶ கன்யா கநாபோக துங்க
ஸ்தநா லிங்கநாஸக்த காஶ்மீர ராகம் |
நமஸ்யாம்யஹம் தாரகாரே தவோர:
ஸ்வபக்தாவனே ஸர்வதா ஸாநுராகம் ||

வேடர்குலப் பெண்ணாம் வள்ளி தேவியைத் தழுவியதால் தன் மார்பில் காஶ்மீர பூச்சை உடையவனும் தன் பக்தர்களைக் காப்பவனும் ஆன தாரகாரியே! உன் மார்பை வணங்குகிறேன்.

நிவேதனம் : கற்கண்டு சாதம், பால் பாயசம், தாம்பூலம், தேங்காய்
பாராயணம்: ஒவ்வொரு நாளும் 1000 முறைகள் வீதம் 48 நாட்கள் இந்த ஶ்லோகத்தைச் சொல்லவும்.

12. பகைவர் அழிய...

தோள் வர்ணனை

விதௌ க்லுப்த தண்டான் ஸ்வலீலா த்ருதாண்டான்
நிரஸ்தேப ஶுண்டான் த்விஷாம் காலதண்டான் |
ஹதேந்த்ராரி ஷண்டான் ஜகத்ராண ஶௌண்டான்
ஸதாதே ப்ரசண்டான் ஶ்ரயே பாஹுதண்டான் ||

பிரம்மனுக்குத் தண்டனை தந்ததும், தன் விளையாட்டால் அண்டங்களைக் காத்ததும், யானையின் துதிக்கைகளை வென்றதும், விரோதிகளை அழிப்பதும், இந்திராதி தேவர்களின் விரோதிகளை அடக்கியதும் ஆன பராக்ரமம் வாய்ந்த உன் தோள்களைப் போற்றுகின்றேன்.

நிவேதனம் : புளியம்சாதம் அல்லது எலுமிச்சம்பழ சாதம்
பாராயணம்: ஒவ்வொரு நாளும் 2500 முறைகள் வீதம் 48 நாட்கள் இந்த ஶ்லோகத்தைச் சொல்லவும்.

13. அவதூறு நீங்க...

முக வர்ணனை

ஸதா ஶாரதா ஷண்ம்ருகாங்கா யதி ஸ்யு:
ஸமுத்யந்த ஏவ ஸ்திதாஸ்சேத் ஸமந்தாத் ।
ஸதா பூர்ண பிம்பா: களங்கைஶ்ச ஹீநா:
ததா த்வன் முகாநாம் ப்ருவே ஸ்கந்த ஸாம்யம் ॥

ஏ கந்தா! உன் முகத்துக்கு ஒப்புமையாக சந்திரனைக் கூறலாம் என்றால் சந்திரன் அதற்கு ஒத்து வரவில்லை, காரணம், அவன் எப்போதும் ஶரத் ருதுவில் உண்டாவதில்லை. ஆறு உருவம் பெற்றவன் இல்லை. களங்கமற்றவன் இல்லை. எப்பொழுதும் முழு உருவம் பெற்றவனாகவும் இல்லையே!

நிவேதனம் : எள்சாதம், முக்தான்னம், தேன், தேங்காய், பழம்
பாராயணம்: ஒவ்வொரு நாளும் 1000 முறைகள் வீதம் 36 நாட்கள் இந்த ஶ்லோகத்தைச் சொல்லவும்.

14. பிறரை வசீகரிக்க...

முக வர்ணனை

ஸ்புரன் மந்த ஹாஸைஸ் ஸஹம்ஸானி சஞ்சத்
கடாக்ஷா வளீப்ருங்க ஸங்கோஜ்வலானி ।
ஸுதாஸ்யந்தி பிம்பாதராணீஶ ஸூநோ
தவாலோகயே ஷண்முகாம் போருஹாணி ॥

பிராகாசிக்கும் புன்சிரிப்பாம் அன்னத்தை உடையவையும், கடைக்கண் பார்வைகளாம் வண்டுகளால் அலங்கரிக்கப் பட்டவையும், அம்ருதம் பொழியும் உதடுகள் உடையவையும் ஆன உன் ஆறு முகங்களாம் தாமரைகளை நேரில் காண்கிறேன்.

நிவேதனம் : கற்கண்டு சாதம், உளுந்து வடை, கொம்புத் தேன், பழம்
பாராயணம்: ஒவ்வொரு நாளும் 1000 முறைகள் வீதம் 48 நாட்கள் இந்த ஶ்லோகத்தைச் சொல்லவும்.

15. செல்வம் பெருக...

கண்களின் வர்ணனை

விசாலேஷு கர்ணாந்த தீர்கேஷ்வஜஸ்ரம்
தயாஸ்யந்திஷு த்வாதஶ ஸ்வீக்ஷணேஷு ।
மயீஷத் கடாக்ஷ: ஸக்ருத் பாதி தஸ்சேத்
பவேத் தே தயாஶீல காநாம ஹாநி: ॥

பரந்ததும், காதுவரை நீண்டதும் ஆன கண்களிலிருந்து பொழியும் அம்ருதமயமான உன் கடைக்கண் பார்வையை என்மீது விழச் செய்யலாகாதா? ஏன்? அவ்வாறு செய்வதால் உனக்கு என்ன குறைவு ஏற்படும்?

நிவேதனம் : சர்க்கரைப் பொங்கல், தேன், தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு
பாராயணம்: ஒவ்வொரு நாளும் 1000 முறைகள் வீதம் 48 நாட்கள் இந்த ச்லோகத்தைச் சொல்லவும்.

16. ஆயுள் பெருக...

ஶிரோ வர்ணனை

ஸுதாங்காத் பவோ மேஸி ஜீவேதி ஷட்தா
ஜபன் மந்த்ர மீஶோ முதா ஜிக்ரதேயான் ।
ஜகத்பார ப்ருத்ப்யோ ஜகந்நாத தேப்ய:
கிரீடோஜ் வலேப்யோ நமோ மஸ்தகேப்ய: ॥

"ஏ குழந்தாய்! என் மடிமீது வந்து அமர்" என்று சிவன் எந்த உன் ஆறு சிரசுகளை உச்சி முகர்ந்து கூறினாரோ அவை உலகின் துன்பத்தைத் தாங்கும் கிரீடங்களாக அலங்கரிக்கப் பட்டுள்ளன. அவைகளுக்கு என் நமஸ்காரம்.

நிவேதனம் : க்ஷீரான்னம் அல்லது பால் சாதம்
பாராயணம்: ஒவ்வொரு நாளும் 100 முறைகள் வீதம் 12 நாட்கள் இந்த ச்லோகத்தைச் சொல்லவும்.

17. ஸர்வகார்ய சித்தி...

குஹ த்யானம்

ஸ்புரத் ரத்ந கேயூர ஹாராபிராம:
சலத் குண்டல ஸ்ரீலஸத் கண்ட பாக: |
கடௌ பீத வாஸா:கரே சாரு ஶக்தி:
புரஸ்தாத் ம்மாஸ் தாம் புராரேஸ்தனூஜ: ||

ஒளி வீசும் இரத்தின மயமான கேயூர மாலைகளால் அழகு பெற்றவனாகவும், அழகோடு அசையும் குண்டலங்களின் ஒளியால் விளங்கும் கன்னங்களை உடையவனாகவும், இடுப்பில் மஞ்சள் நிற ஆடை அணிந்தவனாகவும், கையில் அழகிய சக்தி வேலை பிடித்தவனாகவும் உள்ள, முப்புறம் எரித்த சிவன் மைந்தனே! நீ எப்போதும் என் மனக்கண் முன் காட்சி தருவாய்,

நிவேதனம் : தினைப்பாயசம், தேன், தேங்காய், பழம், வெற்றிலைப் பாக்கு
பாராயணம்: ஒவ்வொரு நாளும் 1200 முறைகள் வீதம் 12 நாட்கள் இந்த ஶ்லோகத்தைச் சொல்லவும்.

18. குழந்தை பெற...

ஷடக்ஷர மகிமை

இஹாயாஹி வத்ஸேதி ஹஸ்தான் ப்ரஸார்யா
ஹ்வயத்யாத ராத் ஶங்கரே மாது ரங்காத் |
ஸமுத்பத்ய தாதம் ஶ்ரயந்தம் குமாரம்
ஹராஶ்லிஷ்ட காத்ரம் பஜே பாலமூர்த்திம் ||

"குஹனே குழந்தாய் இங்கு வா!" எனக் கைகளை நீட்டி சங்கரர் உன்னை அழைக்க, நீ தாய் மடியிலிருந்து தாவி வர, குழந்தையான உன்னை சிவன் அணைத்துக் கொண்டாரல்லவா? அந்த நிலையில் உன்னை தியானிக்கிறேன்.

நிவேதனம் : கரும்பு, த்ரிமதுரம், வடை, தினைப் பாயசம், தத்யன்னம்
பாராயணம்: ஒவ்வொரு நாளும் 600 முறைகள் வீதம் 36 நாட்கள் இந்த ஶ்லோகத்தைச் சொல்லவும்.

19. தற்காப்புப் பெற...

நாம மகிமை

குமாரேசஸூநோ குஹஸ்கந்த ஸேநா
பதே சக்தி பாணே மயூராதி ரூட |
புளிந்தாத்மஜா காந்த பக்தார்தி ஹாரின்
ப்ரபோ தாரகாரே ஸதாரக்ஷ மாம் த்வம் ||

குமாரனே! ஈச புத்திரனே! குஹனே ஸ்கந்தா! சேனைத் தலைவனே! கையில் சக்தி வேலைப் பிடித்தவனே! மயில் வாஹனனே! வள்ளி மணாளனே! பக்தர் துன்பம் துடைப்பவனே! தாரகாஸூரனை வதைத்தவனே! பிரபுவே! எப்போதும் என்னைக் காப்பாய்.

நிவேதனம் : தேங்காய்ப் பால், பானகம்
பாராயணம்: ஒவ்வொரு நாளும் 600 முறைகள் வீதம் 6 நாட்கள் இந்த ஸ்லோகத்தைச் சொல்லவும்.

20. நிம்மதியாய் இறக்க...

மரண ஸமயத்தில் குஹ த்யானம்

ப்ரசாந்தே ந்த்ரியே நஷ்டஸம்ஞே விசேஷ்டே
கபோத்காரி வக்த்ரே பயோத் கம்பி காத்ரே |
ப்ரயாணோன்முகே மய்யநாதே ததானீம்
த்ருதம் மே தயாளோ பவாக்ரே குஹத்வம் ||

குகனே! என் ஐம்புலன்களும் ஒவ்வொன்றாக அடங்கியபின் நினைவு தடுமாற, அவயவங்கள் அசைய மறுக்க, கபம் வாயால் கொட்ட, பயத்தால் உடல் நடுங்க, மரணத் தறுவாயில் தவிக்கும் எனக்கு யார் கதி? அப்போது நீயே என் முன் தோன்றிக் காத்தல் வேண்டும்.

நிவேதனம் : புளியஞ்சாதம், தயிர் சாதம், எலுமிச்சம்பழ சாதம்
பாராயணம்: ஒவ்வொரு நாளும் 1000 முறைகள் வீதம் 36 நாட்கள் இந்த ஸ்லோகத்தைச் சொல்லவும்.

21. முக்தி பெற...

மரண ஸமயத்தில் குஹ த்யானம்

க்ருதாந்தஸ்ய தூதேஷு சண்டேஷு கோபாத்
தஹேத் சிந்தி பிந்தீதி மாம் தர்ஜயத்ஸு ।
மயூரம் ஸமாருஹ்ய மாபீ ரிதி த்வம்
புரஶ்ஶக்தி பாணிர் மமாயாஹி ஶீக்ரம் ॥

கொடிய எமதூதர்கள் என் அருகில் வந்து, "விடாதே! அடி!" எனச் சொல்லி பயமுறுத்தும்போது, ஏ குஹா! மயில் வாகனத்தின் மீது ஏறி, வேலைக் கையில் ஏந்தி, "பயப்படாதே!" எனக்கூறி என்முன் விரைவில் வருவாய்.

நிவேதனம் : அக்கார அடிசல், எள் சாதம், தாம்பூலம்
பாராயணம்: ஒவ்வொரு நாளும் 2000 முறைகள் வீதம் 48 நாட்கள் இந்த ஶ்லோகத்தைச் சொல்லவும்.

22. மரண அவஸ்தை குறைய...

மரண ஸமயத்தில் குஹ த்யானம்

ப்ரணம் யாஸக்ருத் பாதயோஸ்தே பதித்வா
ப்ரஸாத்ய ப்ரபோ ப்ரார்த்தயேநேக வாரம் ।
நவக்தும் க்ஷமோஹம் ததாநீம் க்ருபாப்தே
நகார்யாந்த காலே மநாகப்யு பேக்ஷா ॥

குஹா! உன் பாதங்களில் அநேக தடவைகள் நமஸ்கரித்துப் பல தடவைகள் வேண்டுகிறேன் அல்லவா? அதை நினைத்து நான் சாகும் தருவாயில் பேச முடியாது. இருந்தாலும் என்னை அலக்ஷியம் செய்யாமல் காப்பாய்.

நிவேதனம் : கற்கண்டு சாதம், தாம்பூலம்
பாராயணம்: ஒவ்வொரு நாளும் 2000 முறைகள் வீதம் 48 நாட்கள் இந்த ஶ்லோகத்தைச் சொல்லவும்.

23. கடன் தீர அல்லது மனக்லேஶம் நீங்க...

மனக்லேஶ நாஶம்

ஸஹஸ்ராண்ட போக்தா த்வயா ஶூர நாமா
ஹதஸ்தாரகஃ ஸிம்ஹவக்த்ரஶ்ச தைத்யஃ ।
மமாந்தர் ஹ்ருதிஸ்தம் மநஃ க்லேஶ மேகம்
நஹம்ஸி ப்ரபோ கிங்கரோமி க்வயாமி ॥

ஆயிரமாயிரம் அண்டங்களை ஆட்டி வைத்த சூரன், தாரகன், ஸிம்ஹமுகன் போன்ற அஸுரரை நீ அடக்கவில்லையா? அப்படி இருந்தும் என் மனத்தில் நெடுநாளாக உள்ள க்லேஶத்தை வதைக்க வில்லையே! என் செய்வேன்? எங்கு செல்வேன்?

நிவேதனம் : எலுமிச்சம்பழ சாதம், உளுந்து வடை, தினைப் பாயசம்
பாராயணம்: ஒவ்வொரு நாளும் 600 முறைகள் வீதம் 36 நாட்கள் இந்த ஶ்லோகத்தைச் சொல்லவும்.

24. தரித்திரம் நீங்க அல்லது துன்பம் ஒழிய

துக்க நிவ்ருத்தி

அஹம் ஸர்வதா துக்க பாராவஸந்நஃ
பவான் தீனபந்துஃ த்வதன்யம் நயாசே ।
பவத்பக்தி ரோதம் ஸதாக்லுப்த பாதம்
மமாதிம் த்ருதம் நாசயோமா ஸுத த்வம் ॥

குகா! நான் எப்போதும் துன்பச் சுமையால் மிகவும் வலிவிழந்து விட்டேன். நீயோ ஏழைகளின் பங்காளன். நான் உன்னையன்றி வேறு யாரையும் அணுகி எதையும் கேளேன். உன்னிடம் எனக்கு உள்ள பக்தியே எனக்குப் பாதுகாப்பு. இடைவிடாது என்னைச் சூழ்ந்து நிற்கும் துன்பத்தை சீக்கிரம் ஒழிப்பாய்

நிவேதனம்: முக்தான்னம், தினைப் பாயசம், வடை
பாராயணம்: ஒவ்வொரு நாளும் 1000 முறைகள் வீதம் 48 நாட்கள் இந்த ஶ்லோகத்தைச் சொல்லவும்.

25. வியாதி நீங்க அல்லது பில்லி சூனியம் நீங்க...

வியாதி நீக்கம்

அபஸ்மார குஷ்ட க்ஷயார்ஸ: ப்ரமேஹ
ஜ்வரோன்மாத குல்மாதி ரோகா மஹாந்த: ।
பிஸாசாஸ்ச ஸர்வே பவத் பத்ரபூதிம்
விலோக்ய க்ஷணாத் தாரகாரே த்ரவந்தே ॥

ஏ தாரகாரியே! வலிப்பு, குஷ்டம், காசநோய், புற்று நோய், நீரிழிவு, காய்ச்சல், பைத்தியம், வயிற்றுவலி முதலிய பெரிய வியாதிகள், பிஸாசு போன்றவைகள் எல்லாம் பன்னீர் இலைமேல் வைக்கப்பட்ட உன் விபூதியைக் கண்டு பறந்து ஒடுகின்றனவே!

நிவேதனம் : எள்ளு சாதம்(இனிப்பு) தேன், வடை, நெய் அன்னம்

பாராயணம்: ஒவ்வொரு நாளும் 2000 முறைகள் வீதம் 48 நாட்கள் இந்த ஸ்லோகத்தைச் சொல்லவும்.

26. பக்தி வளர...

குஹன் வழிபாட்டு முறை

த்ருஸி ஸ்கந்த மூர்த்தி: ஸ்ருதௌ ஸ்கந்த கீர்த்தி :
முகே மே பவித்ரம் ஸதா தச்சரித்ரம் ।
கரே தஸ்ய க்ருத்யம் வபுஸ்தஸ்ய ப்ருத்யம்
குஹே ஸந்து லீநா மமாஸேஷ பாவா: ॥

ஏ கந்தா! என் கண்முன் தோன்றுவதெல்லாம் உன் உருவமே. வேதங்கள் காண்பதும் உன் பெருமையே. என் வாக்கினின்றும் வெளிவருவது உன் பவித்ர சரித்திரமே. என் கை உன் பணிவிடையில் ஈடுபடவே உள்ளது. என் உடல் உனக்கு உழைக்கவே ஏற்பட்டது. இவ்வாறு எல்லாவற்றையும் உனக்கே அர்ப்பணிக்க அருள்வாய்.

நிவேதனம் : மஹாநைவேத்யம், சத்து மாவு

பாராயணம்: ஒவ்வொரு நாளும் 600 முறைகள் வீதம் 18 நாட்கள் இந்த ஸ்லோகத்தைச் சொல்லவும்.

27. நவக்ரஹ பீடை நீங்க அல்லது இஷ்டா பூர்த்தி கிடைக்க...

அனாத ரக்ஷகத் தன்மை

முநீநா முதாஹோ நருணாம் பக்தி பாஜாம்
அபீஷ்டப்ரதா: ஸந்தி ஸர்வத்ர தேவா: |
நருணாமந்த்ய ஜாநாமபி ஸ்வார்த்த தாநே
குஹாத் தேவமன்யம் நஜாநே நஜாநே ||

முனிவர்கள், பக்தி நிறைந்த மனிதர்கள் முதலியோர்க்கு வேண்டும் வரம் அருள எத்துணையோ தேவதைகள் இருக்கின்றனர். ஆனால், மிகத் தாழ்ந்த மக்களின் விருப்பத்தை நிரப்ப வல்லவன் குஹன் ஒருவனே! அவனன்றி வேறு ஒரு தெய்வத்தை நான் அறியேன்! அறியேன்!

நிவேதனம் : சித்ரான்னம், தேன், பழம், தேங்காய்
பாராயணம்: ஒவ்வொரு நாளும் 900 முறைகள் வீதம் 9 நாட்கள் இந்த ஶ்லோகத்தைச் சொல்லவும்.

28. சத்ரு வசியம் அல்லது வேற்றுமை அகல...

குடும்பத்துடன் வழிபாடு

களத்ரம் ஸுதா பந்துவர்க: பஶுர்வா
நரோவாத நாரீ க்ருஹே யே மதீயா: |
யஜந்தோ நமந்த: ஸ்துவந்தோ பவந்தம்
ஸ்மரந்தஶ்ச தே ஸந்து ஸர்வே குமார ||

ஏ குமரா! என் வீட்டில் உள்ள மனைவி, மக்கள், உற்றார், உறவினர், மிருகங்கள், ஆண்கள், பெண்கள் அனைவரும் உன்னையே நினைப்பவர்களாகவும், போற்றுபவர்களாகவும் இருக்க வரம் தருவாய்.

நிவேதனம் : வெண்பொங்கல், பானகம், நீர்மோர்
பாராயணம்: ஒவ்வொரு நாளும் 1000 முறைகள் வீதம் 42 நாட்கள் இந்த ஶ்லோகத்தைச் சொல்லவும்.

29. த்ருஷ்டி ஒழிய அல்லது விஷம் நீங்க...

வேல் மஹிமை

ம்ருகா: பக்ஷிணோ தம்ஶகா யேச துஷ்டா:
ததா வ்யாதயோ பாதகா யே மதங்கே |
பவச்சக்தி தீக்ஷ்ணாக்ர பிந்நா ஸ்ஸுதூரே
விநஶ்யந்து தே சூர்ணித க்ரௌஞ்ச சைல ||

க்ரவுஞ்ச மலையைத் தகர்த்தவனே! மிருகங்கள், பறவைகள், கடிக்கக் கூடிய, கொட்டக் கூடிய ஜந்துக்கள் மட்டுமின்றி உடலைத் துன்புறுத்தும் எல்லாவித வியாதிகளையும் கூட உன் ஶக்தி வேலால் அழித்து என்னை அணுகாமல் காப்பாய்.

நிவேதனம் : மிளகுப் பொடி சாதம்
பாராயணம்: ஒவ்வொரு நாளும் 600 முறைகள் வீதம் 6 நாட்கள் இந்த ஶ்லோகத்தைச் சொல்லவும்.

30. குற்றம் குறைய...

க்ஷமாபராதம்

ஜனித்ரீ பிதாச ஸ்வபுத்ராப ராதம்
ஸஹேதே நகிம் தேவஸேநாதி நாத |
அஹம்சாதி பாலோ பவான் லோக தாத:
க்ஷமஸ்வாபராதம் ஸமஸ்தம் மஹேஶ ||

தேவஸேனாதிபதியே ! பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் புரிந்த குற்றங்களைப் பொறுப்பர் அல்லவா? நானோ சிறு குழந்தை! நீயோ உலகனைத்துக்கும் தந்தை! நான் செய்த எல்லா குற்றங்களையும் பொறுத்தருள்வாய்.

நிவேதனம் : சர்க்கரைப் பொங்கல், த்ரிமதுரம்
பாராயணம்: ஒவ்வொரு நாளும் 1000 முறைகள் வீதம் 12 நாட்கள் இந்த ஶ்லோகத்தைச் சொல்லவும்.

31. கீர்த்தி அல்லது புகழ் பெருக அல்லது ஒற்றுமை ஓங்க...

குகன் பரிவார வழிபாடு

நம: கேகிநே சக்தயே சாபி துப்யம்
நமச்சாக துப்யம் நம: குக்குடாய !
நம: ஸிந்தவே ஸிந்து தேசாய துப்யம்
புனஸ்கந்த மூர்த்தே நமஸ்தே நமோஸ்து ||

ஏ ஸ்கந்தனே! உனக்கு நமஸ்காரம். உன் வாகனமாகிய மயிலுக்கு நமஸ்காரம். உன் வேலுக்கு நமஸ்காரம். உன் சேவற் கொடிக்கு நமஸ்காரம். உன் செம்மறி ஆட்டு வாகனத்துக்கு நமஸ்காரம். நீ அமர்ந்திருக்கும் சமுத்திரத்துக்கு நமஸ்காரம். உன்னைத் தெய்வமாகக் கொண்ட திருச்செந்தூர் க்ஷேத்திரத்துக்கு நமஸ்காரம்.

நிவேதனம் : பால் பாயசம், வடை, பழம், பானகம், நீர்மோர்

பாராயணம்: ஒவ்வொரு நாளும் 600 முறைகள் வீதம் 36 நாட்கள் இந்த ஸ்லோகத்தைச் சொல்லவும்.

32. வெற்றி பெற...

ஜெயகோஷம்

ஜயாநந்த பூமன் ஜயாபார தாமன்
ஜயாமோக கீர்த்தே ஜயாநந்த மூர்த்தே !
ஜயாநந்த ஸிந்தோ ஜயாசேஷ பந்தோ
ஜயத்வம் ஸதா முக்தி தானேச ஸூனோ ||

ஆனந்த மயமானவனே ! மிகுந்த பராக்கிரமம் வாய்ந்தவனே! ஆனந்த ஸ்வரூபியே! ஆனந்த ஸாகரமே! எல்லா ஜீவராசிகளுக்கும் உரியவனே! எப்போதும் எல்லோருக்கும் முக்தி அளிக்கும் மஹாதேவ ஸூதனே! ஜயவிஜயீபவ.

நிவேதனம் : அக்கார அடிசல், தேங்காய், பழம், தாம்பூலம்-

பாராயணம்: ஒவ்வொரு நாளும் 600 முறைகள் வீதம் 48 நாட்கள் இந்த ஸ்லோகத்தைச் சொல்லவும்.

பலச்ருதி

புஜங்காக்ய வ்ருத்தேன க்லுப்தம் ஸ்தவம் ய:
படேத் பக்தியுக்தோ குஹம் ஸம்ப்ரணம்ய ।
ஸுபுத்ரான் களத்ரம் தனம் தீர்க்கமாயு:
லபேத் ஸ்கந்த ஸாயுஜ்ய மந்தே நரஸ்ஸ: ॥

புஜங்க பிரயாதா விருத்தத்தால் ஆக்கப்பட்ட இந்த ஸ்தோத்ரத்தை பக்தியுடன் குகனை வணங்கித் தினமும் படிப்போர் நல்ல புத்திரர்கள், நற்குணம் வாய்ந்த மனைவி, பொன், பொருள், நீண்ட ஆயுள், நோயற்ற வாழ்வு இவைகளைப் பெறுவதுடன் ஸ்கந்த சாயுஜ்யம் பெறுவர் என்பது உண்மை! உண்மை!

* * * * *

ஸ்கந்த ரத்ன பஞ்சகம்

(திருவிசை நல்லூர் *ஸ்ரீதர வேங்கடேச ஐயாவாள்* அவர்களால் அருளப் பெற்றது)

தஞ்சை மண்ணில் காவிரியின் வடக்கரையில் திருவிசை நல்லூர் என்ற கிராமத்தில் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஸ்ரீதர வேங்கடேஶ ஐயாவாளை அறியாதார் யாருமில்லை. அன்னாருடைய ப்ரார்த்தனைக்கு இணங்கி கங்காதேவியே அவர் வீட்டுக் கிணற்றில் பிரவேசித்ததாகக் கூறுவதுமுண்டு.

200 ஆண்டுகளாக அந்தக் கிணறு பிரஸித்தி பெற்றதாகவே இருக்கிறது. அந்த இல்லம் இன்று 'கோதண்டராம ஸ்வாமி மட'மாக மாற்றப்பட்டு அந்த மஹானது உற்சவம் அங்கு கோலாகலமாக நடைபெற்று வருகிறது.

அன்னாருடைய 'ஸ்கந்த ரத்ன பஞ்சகம்' இந்நூலின் தொகுப்பில் இடம் பெறுவது ஸ்கந்தனின் அனுக்ரஹமேயன்றி வேறென்ன சொல்வது?

–மல்லாஜி வெ. ரத்ன சர்மா

ஆசையை அறுத்தவன்

ஶ்ருதிஶத நுதரத்னம் ஶுத்த ஸத்வைக ரத்னம்
யதிஹிதகர ரத்னம் யக்ஞஸம்பாவ்ய ரத்னம் ।
திதிஸுதரிபுரத்னம் தேவஸேநேஶ ரத்னம்
ஜிதரதிபதி ரத்னம் ஸம்ஶ்ரயே ஸ்கந்த ரத்னம் ॥ 1

அநேக வேதங்களால் துதிக்கப் பட்டவரும், ஒரே கலப்பற்ற ஸத்வ குண வடிவானவனும், துறவிகளுக்கு உதவி புரிபவனும், யாகத்தின் பயனானவனும், அஸுரர்களின் ஶத்ருவும், தேவஸேனையின் கணவனும், மன்மதனைவிட அழகுள்ளவனும் ஆன ரத்தினத்திற்கு ஒப்பான ஸ்கந்தனைச் ஶரணடைகிறேன்!

காமனை வென்றவன்

ஸுரமுகபதிரத்னம் ஸூக்ஷ்ம போதைக ரத்னம்
பரமஸுகத ரத்னம் பார்வதீஸூநு ரத்னம் ।
ஶரவணபவ ரத்னம் ஶத்ருஸம்ஹார ரத்னம்
ஸ்மர ஹரஸுதரத்னம் ஸம்ஶ்ரயே ஸ்கந்த ரத்னம் ॥ 2

சிறந்த தேவர்களின் தலைவனும், நுண்ணறிவானவனும், மேலான ஸுகத்தைக் கொடுப்பவனும், பார்வதியின் மகனும், நாணல் காட்டின் நடுவில் உதித்தவனும், விரோதிகளை அழிப்பவனும், சிவபெருமான் மைந்தனுமான ரத்தினத்திற்கு ஒப்பான ஸ்கந்தனைச் ஶரணடைகிறேன்!

அகத்தியர் ஆசான்

நிதிபதி ஹிதரத்னம் நிஶ்சிதாத்வைத ரத்னம்
மதுரசரிதரத்னம் மாநிதாயங்க்ரி அப்ஜரத்னம் ।
விதுஶதநிபரத்னம் விஶ்வஸந்த்ராண ரத்னம்
புதமுநி குருரத்னம் ஸம்ஶ்ரயே ஸ்கந்த ரத்னம் ॥ 3

குபேரனுக்குத் துணைவனும், இரண்டின்றி ஒன்றானவனும், இனிமையான நடத்தையை உடையவனும், பூஜிக்கத் தகுந்த பாதங்களை உடையவனும், பல சந்திரர்களுக்கு ஒப்பான ஒளியை

உடையவனும், உலகத்தைக் காப்பவனும், அகத்திய முனிவருக்குக் குருவானவனும் ஆன ரத்தினத்திற்கு ஒப்பான ஸ்கந்தனை ஶரணடைகிறேன்.

போக மோக்ஷ தாதா

அபயவரத ரத்னம் ப்ராப்த ஸந்தான ரத்னம்
இபமுக நுதரத்னம் ஈஶ ஶக்த்யைக ரத்னம் ।
ஶுபகர முகரத்னம் ஶத்ருஸம்ஹார ரத்னம்
உபயகதித ரத்னம் ஸம்ஶ்ரயே ஸ்கந்த ரத்னம் ॥ 4

அபயமாம் வரத்தை வழங்குபவனும், சொற் செல்வத்தைத் தருபவனும், விநாயகப் பெருமானுடன் கூடியவனும், ஶிவஶக்திகளின் ஒற்றுமையை விளக்குபவனும், நன்மையையே செய்பவனும், ஶத்ருனை அழித்தவனும், போக மோக்ஷங்களைத் தருபவனும் ஆன ரத்தினத்துக்கு ஒப்பான ஸ்கந்தனைச் ஶரணடைகிறேன்.

அந்தணர் அதிபன்

ஸுஜந ஸுலபரத்னம் ஸ்வர்ணவல்லீஶ ரத்னம்
பஜன ஸுகதரத்னம் பாநுகோட்யாப ரத்னம் ।
அஜஶிவ குருரத்னம் சாத்புதா கார ரத்னம்
த்விஜகணநுத ரத்னம் ஸம்ஶ்ரயே ஸ்கந்த ரத்னம் ॥ 5

நல்லோருக்கு எளிதானவனும், ஸ்வர்ண்வல்லியின் மணாளனும், போற்றியவருக்குச் ஸுகத்தைத் தருபவனும், கோடி சூரியர்களுக்கு ஒப்பானவனும்,பிரும்மா, சிவன் இவர்களுக்கு மேம்பபட்டவனும், விசித்திரமான வடிவுள்ளவனும், அந்தணரால் போற்றப் படுபவனும் ஆன ரத்தினத்திற்கு ஒப்பான ஸ்கந்தனைச் ஶரணடைகிறேன்!

பலஶ்ருதி

ஷண்முகஸ்ய ஸகலார்த்த ஸித்திதம்
பஞ்சரத்ன மகப்ருந்த க்ருந்தனம் ।
யே படந்தி விபவை: ஸ்புடான்விதா
ஸ்ரீதராக்ய குரோரனுக்ரஹாத் ॥ 6

எல்லாப் பாவச் செயல்களையும் போக்கடித்துத் தேவைகளை எல்லாம் நிரப்பவல்ல ஸ்கந்த ரத்ன பஞ்சகத்தை எவர்கள் படிக்கிறார்களோ அவர்கள் ஸ்ரீதர ஐயாவாள் என்ற குருவின் அருளால் எல்லா இன்பங்களையும் பெறுவர்.

* * * * *

ப்ரம்ஹஸ்ரீ மல்லாஜி வெங்கட்ராமய்யர் இயற்றிய

ஆக்நேய ஆர்த்தி விநாசனஸ்தவம்

புலிவலவாஸன்

நமோந்தர்கத நாயக்யா அகஸ்த்யேஸேனச ஸோபித ।
நமஸ்தே வ்யாக்ர பூர்நாத ஆக்நேயார்த்திம் விநாஸய ॥ 1

புலிவலம் என்ற க்ஷேத்ரத்தில் அகஸ்தீஶ்வரருடனும், அந்தர்கத நாயகியுடனும் கூடி விளங்கும் பாலஸுப்ரமண்யா! உனக்கு நமஸ்காரம். அக்னியில் உதித்த பாஹுலேயனே! எங்கள் துன்பம் தீர்ப்பாய்.

தக்ஷிணாமூர்த்தி

நமஸ்தே யாம்யதிக்வக்த்ர நமஸ்தே அகஸ்த்ய: தேஶிக ।
மத்யங்கத ஜகத்பித்ரோ: ஆக்நேயார்த்திம் விநாஸய ॥ 2

உலகத் தந்தையரான பார்வதிக்கும் பரமேச்வரனுக்கும் நடுவில் விளங்குபவனும், அகஸ்தியருக்கு ஆசானுமாகத் தெற்கு முகமாக இருப்பவனே! உனக்கு நமஸ்காரம். அக்னியில் உதித்த பாஹுலேயனே! எங்கள் துன்பம் தீர்ப்பாய்.

வ்யாக்ராஸுரஹரன்

கூபாத்மகக்ஷேத்ர தீர்த்தம் ஸ்வவாமே ந்யஸ்ய சாலயே ।
வ்யாக்ராஸுரஹர ஸ்வாமிந் ஆக்நேயார்த்திம் விநாஸய ॥3

உனது கோவிலுக்குள் இடப்புறமாக உள்ள கிணற்றையே தீர்த்தமாகக் கொண்டவனே! வ்யாக்ராஸுரனை வதைத்தவனே! உனக்கு நமஸ்காரம். அக்னியில் உதித்த பாஹுலேயனே! எங்கள் துன்பம் தீர்ப்பாய்.

மயில் வாஹனன்

பாலஸுப்ரமண்ய மூர்த்தே வல்லீ ஷஷ்டி ஸமந்வித।
ஶிகிவாஹ நமஸ்தேऽஸ்து ஆக்நேயார்த்திம் விநாஶய ॥ 4

மயில் வாகனத்தில் வல்லீ தேவசேனையோடு விளங்கும் பாலஸுப்ரமண்யனே! உனக்கு நமஸ்காரம். அக்னியில் உதித்த பாஹுலேயனே! எங்கள் துன்பம் தீர்ப்பாய்.

ப்ரணவோபதேஶம்

ப்ரணவார்த்த மகஸ்த்யாய அத்ரைவோபாதிசம்த்விதி ।
தக்ஷிணாஸ்ய ஞாபயஸே ஆக்நேயார்த்திம் விநாஶய ॥ 5

"தக்ஷிணா மூர்த்தியாகி அகஸ்தியருக்கு ப்ரணவோபதேசம் செய்தேன்" என்று உலகுக்குக் காட்ட தெற்கு முகமாய் விளங்குபவனே! உனக்கு நமஸ்காரம். அக்னியில் உதித்த பாஹுலேயனே! எங்கள் துன்பம் தீர்ப்பாய்.

கார்த்திகேயன்

நமஸ்தே ஶிவயோஸ்ஸூனோ க்ருத்திகாபிஶ்ச பாலித ।
நமஸ்தே ஷண்முக ஸ்கந்த ஆக்நேயார்த்திம் விநாஶய ॥ 6

சிவ பார்வதியின் மைந்தனும், கிருத்திகை மாதர்களால் வளர்க்கப் பட்டவனுமான ஆறு முகங்கள் கொண்ட கந்தனே! உனக்கு நமஸ்காரம். அக்னியில் உதித்த பாஹுலேயனே! எங்கள் துன்பம் தீர்ப்பாய்.

தேவர் ஶரணாகதி

நமஸ்தேऽஸ்ரப பீதாநாம் தேவாநாம் ஶரணார்த்திநாம் ।
நமஸ்தேऽபயத ஸ்வாமிந் ஆக்நேயார்த்திம் விநாஶய ॥ 7

அசுரர்களிடம் பயந்து உன்னைச் சரண் அடைந்த தேவர்களுக்கு அபயம் கொடுத்தவனே! உனக்கு நமஸ்காரம். அக்னியில் உதித்த பாஹுலேயனே! எங்கள் துன்பம் தீர்ப்பாய்.

ஸேனைத் தலைவர்

தேவைஸ் ஸம்ப்ரார்த்தித ஸ்வாமிந் ஸேநாநேத்ரு பதாவஹ ।
நமஸ்தேऽமரஸேநாநீ: ஆக்நேயார்த்திம் விநாஶய ॥ 8

தேவர்களால், தங்கள் சேனைக்குத் தலைவனாக வேண்டப்பட்டு, தேவர் ஸேனைத் தலைவனானவனே! உனக்கு நமஸ்காரம். அக்னியில் உதித்த பாஹுலேயனே! எங்கள் துன்பம் தீர்ப்பாய்.

தாரகாரி

நமஸ்தே நவவீரேஶ தாரகாஸுர ஸூதந ।
க்ரௌஞ்ச தாரிந் நமஸ்தேஸ்து ஆக்நேயார்த்திம் விநாஶய॥ 9

நவ வீரர்கள் தலைவனே! தாரகாசுரனை அழித்தவனே! க்ரௌஞ்ச மலையைத் தகர்த்தவனே! உனக்கு நமஸ்காரம். அக்னியில் உதித்த பாஹுலேயனே! எங்கள் துன்பம் தீர்ப்பாய்.

தேவகிரி பூஜை

நமஸ்தே தேவஶைலேஶ தேவதாபிஸ் ஸமர்சித ।
நாரதாதி முநீந்த்ரேட்ய ஆக்நேயார்த்திம் விநாஶய ॥ 10

தேவகிரியில் தேவர்களாலும், நாரதர் முதலிய முனிவர்களாலும்; சிறப்பாகப் பூஜிக்கப் பட்டவனே! உனக்கு நமஸ்காரம். அக்னியில் உதித்த பாஹுலேயனே! எங்கள் துன்பம் தீர்ப்பாய்.

ஶூரஸம்ஹாரி

நமஸ்தே ஶூரஸம்ஹாரிந் நமஸ்தே லோகரக்ஷக ।
நமஸ்தே பக்திஸுலப ஆக்நேயார்த்திம் விநாஶய ॥ 11

சூர பத்மனை அழித்து உலகைக் காத்தவனே! பக்தர்களுக்கு எளியவனே! உனக்கு நமஸ்காரம். அக்னியில் உதித்த பாஹுலேயனே! எங்கள் துன்பம் தீர்ப்பாய்.

தேவஸேனை கல்யாணம்

உத்வாஹ்ய ஶக்ரதநயம் தேவேந்த்ரேண ஸுபூஜித ।
நமஸ்தே பாஹுலேயாக்ய ஆக்நேயார்த்திம் விநாஶய ॥ 12

தேவஸேனையை மணந்து இந்திரனால் பூஜிக்கப் பட்டவனே! பாஹுலேயனே! உனக்கு நமஸ்காரம். அக்னியில் உதித்த பாஹுலேயனே! எங்கள் துன்பம் தீர்ப்பாய்.

வள்ளி கல்யாணம்

விவாஹ்ய ஶாபரீம் கந்யாம் வல்லீதேவீ மநோரம ।
நமஸ்தே ப்ரணவாகார ஆக்நேயார்த்திம் விநாஶய ॥ 13

வேடர்குலப் பெண்ணாம் வள்ளியின் மனத்தைக் கவர்ந்து, அவளை மணந்தவனே! ப்ரணவத்தையே உருவாகக் கொண்டவனே! உனக்கு நமஸ்காரம். அக்னியில் உதித்த பாஹுலேயனே! எங்கள் துன்பம் தீர்ப்பாய்.

ஸ்கந்தகிரி வாஸம்

நமஸ்தே ஸ்கந்த ஶைலேஶ நமஸ்தே குக்குடத்வஜ ।
போவிஶாக நமஸ்தேऽஸ்து ஆக்நேயார்த்திம் விநாஶய ॥ 14

ஸ்கந்தகிரிக்கு அதிபனே! சேவற் கொடியைக் கொண்ட விஶாகனே! உனக்கு நமஸ்காரம். அக்னியில் உதித்த பாஹுலேயனே! எங்கள் துன்பம் தீர்ப்பாய்.

முக்தி தாதா

நமஸ்தே ஞாநதாத்ரேதே நமஸ்தேऽக்ஞாநநாஶிநே ।
நமஸ்தே முக்திதாநேஶ ஆக்நேயார்த்திம் விநாஶய ॥ 15

அக்ஞானத்தை நீக்கி ஞானத்தை வழங்கி அதன் மூலம் முக்தியைத் தருபவனே! உனக்கு நமஸ்காரம். அக்னியில் உதித்த பாஹுலேயனே! எங்கள் துன்பம் தீர்ப்பாய்.

பக்த ரக்ஷகன்

நமஸ்தே பக்த ஸுலப ஶரணாவந தீக்ஷித ।
பாப நாஶக லோகேஶ ஆக்நேயார்த்திம் விநாஶய ॥ 16

அடைக்கலம் என்று உன்னை அடைந்த பக்தர்களின் பாபத்தைப் போக்கி, அவர்களைக் காப்பதையே உறுதியாகக் கொண்டவனே! உனக்கு நமஸ்காரம். அக்னியில் உதித்த பாஹுலேயனே! எங்கள் துன்பம் தீர்ப்பாய்.

எல்லோரையும் காப்பாய்

ஸர்வாந் லோகாந் மஹாஸேந க்ஷாமக்ஷோபாதி நாஶநாத் ।
தநதாந்யாதி பீரக்ஷ ஆக்நேயார்த்திம் விநாஶய ॥ 17

அக்னியில் உதித்த பாஹுலேயனே! உலகம் முழுவதிலும் வறுமை, பிணி நீக்கிச் செல்வம், உணவு முதலியவற்றைத் தந்து எங்கள் துன்பம் தீர்ப்பாய்.

என்னையும் காப்பாய்

ஸம்ஸாரபய மக்நம்மாம் ஸர்வாமய·ஸமந்விதம் ।
ஶரணாகதம் பாலயமாம் ஆக்நேயார்த்திம் விநாஶய ॥ 18

அக்னியில் உதித்த பாஹுலேயனே! பலவிதத் துன்பங்கள் நிறைந்த உலக வாழ்வில் மூழ்கி உன்னைச் சரணடைந்த என்னையும் துன்பம் தீர்த்துக் காப்பாய்.

* * * * *

ஸ்வாமிநாதஸ்வம்

கந்தபுராணம் குமரனின் திருவிளையாடல்களை விவரித்துக் கூறும். அந்தத் திருவிளையாடல்களில் மிகச் சிறந்ததாக (ஓம் எனும் மந்திரத்தின் பொருளுரைத்த) "பிரணவோபதேஶ"த்தைக் கூறுவர். அந்தப் பிரணவோபதேஶம் நடந்த இடம் ஸ்வாமிமலை என்பர் அதனால்தான் இங்கு குடிகொண்டிருக்கும் குமரனுக்கு ஸ்வாமிநாதன் என்று பெயர். அதற்கேற்ப, இங்கே சிவபெருமானுக்கு ஆலயம் கீழேயும், ஸ்வாமிநாதனுக்கு ஆலயம் மேலேயும் அமைந்திருக்கின்றன. இந்த ஸ்வாமி மலையின் மேல் ஏறி ஸ்வாமி நாதனைக் கண்டு களிக்க, எல்லோருக்கும் உதவ 'ப்ரபவ' முதல் 'அக்ஷய' முடிய உள்ள 60 வருடங்களும் தாமாகவே 60 படிகளாக ஆகிவிட்டன என்கிறது புராணம். இது குமரனின் ஆறு ஆதார க்ஷேத்திரங்களில் ஒன்று.

இது தென்னிந்தியாவில் தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்திற்கு மேற்கே காவிரி நதியின் வடகரையில் அமைந்துள்ளது. கும்பகோணத்திலிருந்து இங்கு செல்ல நிறையப் பேருந்து வசதிகள் உள்ளன.

அந்த ஸ்வாமிநாதனைப் போற்றி நிற்கும் இந்த

'ஸ்வாமிநாதஸ்வம்' படிப்பவர் வாழ்வில் ஒளியேற்றி என்றும் புகழ் பெற்றிருக்க எல்லாம் வல்ல அந்தக் கந்தப் பெருமானை வணங்குகிறேன்.

—மல்லாஜி வெ. ரத்னசர்மா

1. கேட்டது கொடுப்பான்

ஹே ஸ்வாமிநா தார்த்த பந்தோ-பஸ்ம
லிப்தாங்க, காங்கேய, காருண்ய ஸிந்தோ (ஹே)
ருத்ராக்ஷதாரின் நமஸ்தே -ரௌத்ர
ரோகம், ஹரத்வம் புராரேர்குரோர்மே
ராகேந்து வக்த்ரம் பவந்தம்-மார
ரூபம் குமாரம் பஜே காமபூரம் (ஹே)

துன்பப் படுகிறவர்களுக்குத் துணைவனே! திருநீறு பூசியதால் உடல் வனப்பு கொண்டவனே! கங்கையின் மைந்தனே! கருணைக் கடலே! ஸ்வாமிநாதா! அருள்வாய்.

ருத்ராக்ஷம் தரித்தவனே! உனக்கு நமஸ்காரம். சிவகுருவே! பயங்கரமான என் வியாதியைப் போக்குவாய். முழுமதியன்ன முகத்தவனே! மன்மதன் உருப்பெற்ற குமரா! கேட்டதைக் கொடுக்கும் உன்னைப் போற்றுகிறேன்.

2. துன்பம் தீர்ப்பான்

ஹே ஸ்வாமிநா தார்த்த பந்தோ-பஸ்ம
லிப்தாங்க, காங்கேய, காருண்ய ஸிந்தோ (ஹே)
மாம்பாஹி ரோகாத கோராத்-மங்க
ளாபாங்க பாதேன பங்காத் ஸ்வராணாம்
காலாம்ச துஷ்பாக கூலாத்-கால
காலஸ்ய ஸூனும் பஜே க்ராந்தஸானும் (ஹே)

துன்பப் படுகிறவர்களுக்குத் துணைவனே! திருநீறு பூசியதால் உடல் வனப்பு கொண்டவனே! கங்கையின் மைந்தனே! கருணைக் கடலே! ஸ்வாமிநாதா! அருள்வாய்.

கடுமையான வியாதியினின்றும் என்னைக் காப்பாய். மங்களம் தரும் கடைக்கண் விழியை என்மீது செலுத்திக் கெட்ட காலத்திலிருந்து என்னை விடுவிப்பாய். காலகாலன் மைந்தனும், மலையடியில் வசிப்பவனுமான உன்னைப் போற்றுகிறேன்.

3. மறைக்குள் மறைந்தான்

ஹே ஸ்வாமிநா தார்த்த பந்தோ-பஸ்ம
லிப்தாங்க, காங்கேய, காருண்ய ஸிந்தோ (ஹே)
ப்ரம்ஹாதயோ யஸ்ய ஶிஷ்யா:-ப்ரம்ஹ
புத்ரா கிரௌயஸ்ய ஸோபானபூதா:
ஸைன்யம் ஸுராஸ்சாபி ஸர்வே-ஸாம
வேதர்திகேயம் பஜே கார்த்திகேயம் (ஹே)

துன்பப் படுகிறவர்களுக்குத் துணைவனே! திருநீறு பூசியதால் உடல் வனப்பு கொண்டவனே! கங்கையின் மைந்தனே! கருணைக் கடலே! ஸ்வாமிநாதா! அருள்வாய்.

ப்ரம்ஹா முதலிய தேவர்கள் யாருக்குச் சீடர்களோ, பிரம்ம புத்திரர்களான 'பிரபவ' முதல் 'அக்ஷய' வரை உள்ள 60 வருடங்கள் எவர் வசிக்கும் மலையில் ஏறப் படிகளாக அமைந்து உள்ளனவோ, தேவர்கள் யாருக்குச் சேனைகளானார்களோ, ஸாமவேதம் முதலியவைகள் யாரைப் போற்றுகின்றனவோ அப்படிப் பட்ட கார்த்திகேயனான உன்னைப் போற்றுகிறேன்.

4. கருணை காட்டுவான்

ஹே ஸ்வாமிநா தார்த்த பந்தோ-பஸ்ம
லிப்தாங்க, காங்கேய, காருண்ய ஸிந்தோ (ஹே)
காஷாய ஸம்வீத காத்ரம்-காம
ரோகாதி ஸம்ஹாரி பிக்ஷான்ன பாத்ரம்
காருண்ய ஸம்பூர்ண நேத்ரம்-சக்தி
ஹஸ்தம் பவித்ரம் பஜே ஶம்புபுத்ரம் (ஹே)

துன்பப் படுகிறவர்களுக்குத் துணைவனே! திருநீறு பூசியதால்

உடல் வனப்பு கொண்டவனே! கங்கையின் மைந்தனே! கருணைக் கடலே! ஸ்வாமிநாதா! அருள்வாய்.

உடலில் காஷாய உடை உடுத்தியவனும் காமம், வியாதி முதலியவற்றை அழித்து நிரப்பும் திருவோடு பெற்றவனும், கருணை நிறைந்த கண்களைப் பெற்றவனும், வேலைப் பிடித்தவனும், பரிசுத்தமானவனும், ஶம்புவின் மைந்தனுமான உன்னைப் போற்றுகின்றேன்.

5. ஆசானுக்கு ஆசான்

ஹே ஸ்வாமிநா தார்த்த பந்தோ-பஸ்ம
லிப்தாங்க, காங்கேய, காருண்ய ஸிந்தோ (ஹே)
ஸ்ரீஸ்வாமி சைலே வஸந்தம்-ஸாது
ஸங்கஸ்ய ரோகான் ஸதா ஸம்ஹரந்தம்
ஓங்கார தத்வம் வதந்தம்-ஶம்பு
கர்ணே ஹஸந்தம் பஜேஹம் குஹம்தம் (ஹே)

துன்பப் படுகிறவர்களுக்குத் துணைவனே! திருநீறு பூசியதால் உடல் வனப்பு கொண்டவனே! கங்கையின் மைந்தனே! கருணைக் கடலே! ஸ்வாமிநாதா! அருள்வாய்.

ஸ்ரீஸ்வாமி மலையில் வசிப்பவனும், நல்லோரின் வியாதிகளை அழிப்பவனும், சிவபெருமான் காதில் சந்தோஷத்துடன் பிரணவப் பொருளை விளக்கியவனும், குழந்தையுமான குஹா! உன்னைப் போற்றுகிறேன்.

* * * * *

எமது பிற நூல்கள்

கணபதி ஹோமம்	எஸ்.எஸ். ராகவன்
நவக்ரஹ ஹோமம்	எஸ்.எஸ். ராகவன்
ஆயுஷ்ய ஹோமம்	எஸ்.எஸ். ராகவன்
ஆதித்ய ஹ்ருதயம் (ஸம்ஸ்க்ருத லிபி மற்றும் உரையுடன்)	எஸ்.எஸ். ராகவன்
பஜகோவிந்தம் (ஸம்ஸ்க்ருத லிபி மற்றும் உரையுடன்)	எஸ்.எஸ். ராகவன்
விரத சாமான் பட்டியல் (விவாஹம் பற்றிய விவரங்கள் மற்றும் நலங்குப் பாடல்கள் அடங்கியது)	எஸ்.எஸ். ராகவன்
பத்ராசல மகிமை	ந.ஹரிஹர சுப்ரமணிய சர்மா&இராமாநுஜதாஸன்
ஸ்ரீ நரசிம்மர் திருத்தலங்கள் (ராமதாசரின் 'தாசரதி சதகம்' அடங்கியது)	இராமாநுஜதாஸன்
தித்திக்கும் திருப்புகழ்(கையடக்கப் பதிப்பு)	
பத்ராசல ராமதாசரின் கீர்த்தனைகள் (கையடக்கப் பதிப்பு)	இராமாநுஜதாஸன்
தியாகராஜர் கீர்த்தனைகள்(கையடக்கப் பதிப்பு)	
நவக்ரஹ பீடா நிவாரணி (கையடக்கப் பதிப்பு)	மல்லாஜி வெ. ரத்ன சர்மா

ஆந்திர பத்ததி நூல்கள்

ஆபஸ்தம்ப அபர ப்ரயோகம்	மல்லாஜி வெ. ரத்ன சர்மா
ஆபஸ்தம்ப ச்ராத்த ப்ரயோகம்	மல்லாஜி வெ. ரத்ன சர்மா
அமாவாஸ்ய தர்ப்பணம் (கையடக்கப் பதிப்பு)	மல்லாஜி வெ. ரத்ன சர்மா
யஜுர்வேத சந்தியாவந்தனம் (கையடக்கப் பதிப்பு)	கே. எஸ். ராமசாமி சாஸ்திரிகள்

விரைவில் வெளி வருகிறது...

ஆபஸ்தம்ப பூர்வ ப்ரயோகம்	மல்லாஜி வெ. ரத்ன சர்மா

எமது பிற வெளியீடுகள்

1. ஸ்ரீகணபதி ஹோமம்
2. நவக்ரஹ ஹோமம்
3. மஹா ம்ருத்யுஞ்சய ஹோமம்
4. ஆயுஷ்ய ஹோமம்(குழந்தைகளுக்கு)
5. மஹாலக்ஷ்மி ஹோமம்
6. ஸ்ரீலகு சுதர்சன ஹோமம்
7. ஸ்ரீவாராஹி மஹா யாகம்
8. ஸ்ரீப்ரத்யங்கிரா ஹோமம்
9. ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவ ஹோமம்
10. ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ஹ ஹோமம்
11. ஸ்ரீஸ்வயம்வரா பார்வதீ ஹோமம்
12. ஸ்ரீதன்வந்தரி ஹோமம்
13. ஸ்ரீஸந்தானகோபால ஹோமம்
14. ஸ்ரீலக்ஷ்மீ குபேர ஹோமம்
15. ஸ்ரீகாயத்ரி ஹோமம்
16. ஆதித்ய ஹ்ருதயம்
17. ஸ்ரீஸத்யநாராயண விரத பூஜை
18. ஸ்ரீவரலக்ஷ்மீ விரத பூஜை
19. பஜகோவிந்தம்
20. ஏகாதசி விரத மஹாத்மியம்
21. விரத சாமான் பட்டியல்
22. ஸ்ரீதேவி ஸ்தோத்ரமாலா
23. நவக்ரஹ ஸ்தோத்ரமாலா
24. யஜுர்வேத ஸந்த்யாவந்தனம்
25. ஆபஸ்தம்ப அபர ப்ரயோகம் (இறந்தவருக்கு 13 நாள் காரியம்) (ஆந்த்ர பத்ததி)
26. ஆபஸ்தம்ப ஶ்ராத்த ப்ரயோகம் (ஆந்த்ர பத்ததி)
27. அன்புக் குழந்தைகளுக்கு அதிர்ஷ்டப் பெயர்கள்

குஹஸ்ரீ
மல்லாஜி வெ. ரத்ன சர்மா

இவர் எழுதிய பிற நூல்கள்:

1. பாஹுலேய புஜங்கம்
2. சாஸ்த்ருஸ்துதி ஷட்கம்
3. பவனஸுத பஞ்சரத்னம்
4. ஸ்வர்ணதாராஸ்தவம்
5. மஹா கணேச பஞ்சரத்னம்
6. ஸுப்ரம்மண்ய ஸுப்ரபாதம்
7. ஸ்கந்த ரத்ன பஞ்சகம்
8. ஆக்நேய ஆர்த்தி விநாசனஸ்தவம்
9. நவக்ரஹ பீடா நிவாரிணி
10. ஸ்வாமிநாத ஸ்தவம்
11. ஸ்வாமிநாத ஸப்தகம்
12. ஸ்கந்த ஸத்குரு ஸப்தகம்
13. லவலீ லஹரி
14. வைத்யநாத ஸ்தவம்
15. குஹகீதா
16. ஆபஸ்தம்ப அபர ப்ரயோகம்(ஆந்த்ர பத்ததி)

Srisubramanya Pujanga
91115022
GIRI MRP : RS 8